Guaranteed Circulation 1,000 Copies.

Registered No. M. 1124.

Vol. I] [No. 8.

OFFICE OF THE REGISTRAR
5 FEB 1915

இந்தியன் லா ஜர்னல்

(மாதம் நான்குமுறையாக பிரதி சனிக்கிழமையும் பிரசுரிக்கப்படுகிறது.)

1914௵ அக்டோபர்௴ 3௳ சனிக்கிழமை.

ரிபோர்ட்டுகள்.

சென்னை ஹைகோர்ட் தீர்ப்புகள்.

PRINTED AND PUBLISHED BY S. SUBRAMANYA AIYAR,
AT THE INDIA PRINTING WORKS, 117, ARMENIAN STREET, MADRAS.—24—11—1914.
(ALL RIGHTS RESERVED.)

THE INDIAN LAW JOURNAL.

(TAMIL EDITION.)

இந்தியன் லா ஜர்னல்.

(தமிழ் பிரசுரம்.)

(மாதம் நான்குமுறை ஒவ்வொரு சனிக்கிழமையும் பிரசுரிக்கப்படுகிறது.)

வருஷசந்தா.

	ரூ.அ.பை.
இந்தியா, பர்மா, ரெங்கூனுக்கு தபால் சார்ஜ் உள்பட	6—0—0
சிங்கப்பூர் பினங்கு	8—0—0
ஒரு வார சஞ்சிகை	0—4—0

பத்திரிகை வேண்டியவர்கள் சந்தாத் தொகையை அனுப்பி கடிதம் எழுதவேண்டும். இல்லாவிடில் வி. பி. தபாவில் அனுப்பும்படி உத்திரவு செய்யவேண்டும்.

மாதிரி சஞ்சிகை வேண்டியவர்கள் ½ அணா தபால் ஸ்டாம்பு அடக்கம் செய்து அனுப்பவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

	ரூ. அ. பை.
48 சஞ்சிகைகளிலும் ஒரு வருடத்திற்கு ஒரு பக்கத்திற்கு	60—0—0
6 மாதங்களுக்கு ...	30—0—0
3 „ ...	15—0—0

இந்த பிரகாரம் பாதி பக்கத்திற்கும், கால் பக்கத்திற்கும் கணக்கு செய்துகொள்ளவேண்டும். சாஸ்வத ஒப்பந்தம் செய்கிறவர்கள் மானேஜருடன் பிரத்யேக ஏற்பாடு செய்துகொள்ளலாம்.

விளம்பரம்.

இந்தியன் லா ஜர்னலுக்கு சந்தாதார்கள் சேர்க்க கமிஷன் ஏஜண்டுகள் தேவை.

மானேஜர்,

இந்தியன் லா ஜர்னல் ஆபீஸ்,

117, அரமனைக்காரத் தெரு, சென்னை.

இந்தியன் லா ஜர்னல்

மாதம் நான்கு முறை ஒவ்வொரு சனிக்கிழமையும் பிரசுரிக்கப்படுகிறது.

Vol. I. } 3RD OCTOBER 1914. { No. 8.
தொ. 1. } { நெ. 8.

OFFICE OF THE REGISTRAR
5 - FEB 1915
MADRAS

முக்கிய அறிவிப்பு.

வெகு சந்தாதாரர்களின் வேண்டுதலின்படி இந்த சஞ்சிகை முதல் வெளியிடப்படும் ஹைகோர்ட்டு தீர்மானங்களை ஸிவில், கிரிமினல் என்று வரையிட்டு, ஓயாமல் வியவசாயிகளுக்கு ஏற்படும் ரிவின்யூ வியவாஹாரங்களுக்குறிய விஷயங்களையும் சுலப நடையில் அச்சிடலானோம்.

இந்தியன் லா ஜர்னல்.

1914ஆ அக்டோபர்மீ 3உ சனிக்கிழமை.

சிவில் விவகாரங்கள்.

ALLAHABAD HIGH COURT.

அலஹபாத் ஐக்கோர்ட்.

1911ஆத்திய 2-வது அப்பீல் நெ. 278.

1914-ஆ ஜூலைமீ 17உ.

ஜட்ஜ் :—சுந்தர்லால்.

வலயித்ஹுஸேனும் மற்றவர்களும் } அப்பீல் வாதிகள்.

v.

ராம்லால்—அப்பீல் பிரதிவாதி.

லா பாயின்ட் :—1908ஆத்திய சிவில் விவகாரசட்டத்தின் 2-வது பிரிவின்படி வியாஜ்ஜியம் நின்றுபோவதற்காக அளிக்கப்படும் உத்திரவு ஷை சட்டத்தில் அர்த்தம் செய்திருக்கிறபடி 'டிக்ரி'யாகமாட்டாது; வியாஜ்ஜியம் நின்றுபோய்விட்டதாக செய்யப்பட்ட உத்திரவுக்கு அப்பீல் கிடையாது.

விவகாரச் சுருக்கம் :—கோடாபக்ஸ் என்பவன் மற்றவர்க்கு முன்னே விலைக்குவாங்கும் சுதந்திரத்தைப்பற்றிச் செய்த வியாஜ்ஜியத்தின்பேரிலேற்பட்ட அப்பீல் வியாஜ்ஜியம் நடக்கும்போது கோடாபக்ஸ் இறந்துவிட்டான். அவர்களுடைய வார்ஸுகளை வியாஜ்ஜியத்தில் பார்டிகளாக ஏற்படுத்தப்படாமல், வியாஜ்ஜியத்தை முதலில் விசாரணை செய்த கோர்ட்டார் 1913ஆ ஆகஸ்டு மாதம் 13உ 22-வது அதிகாரம் 3-வது விதியின்படி வியாஜ்ஜியம் நின்றுபோகத் தீர்ப்பு செய்தனர். ஆனால் பிரதிவாதிக்குச் செலவுகள் கொடுக்கப்படவில்லை. இறந்துபோன வாதியின் வார்ஸுகளைப் பிரதிவாதிகளாக்கி அசல் வியாஜ்ஜியத்தின் பிரதிவாதி அப்பீல் செய்தார். சிவில் விவகார விசாரணைச் சட்டத்தின்படி வியாஜ்ஜியத்தை நிறுத்துவதற்காக உத்திரவு டிக்ரியாகாததினால் டிக்ரியைப்போல அப்பீல் செய்யப்படத் தக்கதல்ல. புதிய சிவில் விவகார விசாரணைசட்டத்தின் 104-வது பிரிவின்படிக்காவது அல்லது 43-வது அதிகாரத்தின்படிக்காவது மேற்சொல்லிய உத்திரவு அப்பீல் செய்துகொள்ளத்தக்கதல்ல. அவ்வுத்திரவின் பேரில் அப்பீல் கிடையாதென்னுங் காரணத்தைக்கொண்டு முதல் அப்பீல் கோர்ட்டார்

அப்பீலைத் தள்ளுபடி செய்திருக்கவேண்டும். அப்படியிருந்தும் கோடாபக்ஸின் வார்ஸுகளைப் பார்டிகளாக்கி யிருக்கும் அப்பீலை கீழ் கோர்ட்டார் விமரிசிக்க முயன்று செலவைக் கொடுக்க வேணுமென்று சொல்லி கீழ் கோர்ட் உத்திரவை மாற்றிவிட்டார்கள் அந்த டிக்ரியின்பேரில் இவ்வப்பீல் கொண்டுவரப்பட்டது. முன் சொல்லியபடியே கீழ்கோர்ட்டாருக்கு அப்பீலுக்கிடமில்லை; முதல் கோர்ட்டார் உத்திரவை டிக்ரியென்று கீழ்கோர்ட்டார் மதித்தது பிசகு. கோர்ட்டாசாரப்படி அந்த டிக்ரியின்பேரில் ஐகோர்ட்டுக்கு அப்பீல் உண்டு. அப்பீலை யாமோதித்து கீழ் கோர்ட்டு உத்திரவை ரத்துசெய்து அசல் கோர்ட்டின் உத்திரவை காயஞ்செய்யப்பட்டது.

ALLAHABAD HIGH COURT.

அலஹபாத் ஐகோர்ட்.

1913-ஞ் த்திய 2-வது அப்பீல் நெ. 1528.
1914-ஞ ஜூலைமீ 10உ.

ஜட்ஜ் :—சுந்தர்லால்.

காயாப்பிரசாதும் மற்றவரும் } அப்பீல் வாதிகள்.

v.

லரேடி கூவரும் மற்றவரும் } அப்பீல் பிரதிவாதிகள்.

லாபாயின்ட் : —1850-ஞ த்திய சிவில் விவகார விசாரணைச்சட்டம் வழங்கிவந்த காலத்தில் நடத்தப்பட்ட பகிரங்கமான ஏலத்தில் வாதிகளின் முன்னோரால் பிரதிவாதிகளின் முன்னோர் பேரில் சில சொத்துக்கள் வாங்கப்பட்டன. 1908-ஞ த்திய சட்டம் வழங்க ஆரம்பித்த பிறகு மேற்சொல்லிய சொத்தின் உரிமையைப்பற்றி உபய கக்ஷிக்காரர்களுக்கும் விவாதம் ஏற்பட்டது. 1908-ஞ த்திய சட்டத்தின்படி இவ்வியாஜ்ஜியம் தீர்மானிக்கப்பட வேண்டியதென்றும், ஷை சட்டத்தின் 60-வது பிரிவின்படி கோர்ட் ஏலத்தில் கிரயம் வாங்கினவருக்கும், அவருடைய பிரதிநிதிகளுக்கும் பிரதிவாதஞ் செய்ய இடம் உண்டென்றும் தீர்மானிக்கப்பட்டது.

விவகாரச் சுருக்கம்:—வாதிகளுக்கும் ராம்குமாருடைய வார்ஸுகளுக்கும், ஒப்படைப் பெற்றவர்களுக்கும் பாக சம்பந்தமான வியாஜ்ஜியத்தில் இந்த அப்பீல் ஏற்பட்டது. 400 சதுர கெஜங்கள் விஸ்தீரணமுள்ள ஓர் நிலத்துக்கு பகவத் என்பவர் சொந்தக்காரர். இதில் 100 சதுரகஜ விஸ்தீரணமுள்ள நிலம் 1870-ம் வருஷம் ஜனவரிமாதம் 20-ந்தேதி போபால் ஜோடா என்பவர் பேரில் வாங்கப்பட்டது. இவ்விருவரும் வாதிகளின் குத்தகைதாரர்கள். கிரய சர்ட்டிபிகேட்டில் குத்தகைதாரர்களின் பெயர்கள் நாமகார்த்தகமாய்க் கொண்டுவரப்பட்டன வென்றும், கிரயதாரர்கள் வாதிகளே பொழிய போபால்ஜோடா அல்லவனென்றும், வாதிகளின் தாவா குத்தகைதாரர்கள் இறந்துபோய் அவர்களின் வார்ஸுகள் ஷை நிலத்தை 1 முதல் 3 வரையிலுள்ள பிரதிவாதிகளுக்குக் கிரயம் செய்து, கிரயம் வாங்கினவர்கள் நிலத்தில் கட்டடம் கட்ட ஆரம்பித்தனர். ஷை சொத்தைப் பாகம் செய்வதற்கும் 1 முதல் 3 பிரதிவாதிகள் நிலத்தில் கட்டடம் கட்டவொட்டாமல் தடுக்க இஞ்சங்ஷன் என்னும் கட்டளை பிறப்பிக்க வேண்டுமென்றும் வியாஜ்ஜியம் கொண்டுவரப்பட்டது. சிவில் விவகார விசாரணைச் சட்டத்தின் 66-வது பிரிவின்படி வாதிகள், கோர்ட்டேலத்தில் கிரயம் வாங்கியதைக்கொண்டு ஹக்கை யடைந்தவர்கள்பேரில் வியாஜ்ஜியம் செய்யத் தக்கவர்களல்லவென்றும், வியாஜ்ஜியத்திற்கு இடமில்லையென்றும், பிரதிவாதிகள் வற்புறுத்தினர்கள். கீழ்கோர்ட்டார் பிரதிவாதிகளின் எதிர் வாதத்தை ஒப்புக்கொண்டனர்.

வாதிகள் தரப்பில் இரண்டு விஷயங்கள் சொல்லப்பட்டன. முதல் அம்சமாவது 1859-வது வருஷத்திய 8-வது சட்டத்தின்படி ஏலத்தில் வாங்கியது செலாவணியாகிறது. வழங்காத சட்டத்தின் விதிகளின்படிக்கான எதிர்வாதம் இப்போது தடுக்கச்செல்லுமாவென்பதை விமரிசிக்க வேண்டியிருக்கிறது. 1859-வது வருஷத்திய 8-வது சட்டமும், 1882-வது வருஷத்திய 14-வது சட்டமும் மாறிவிட்டன. அவைகளின்படி ஒரு சொத்தைச் சகஜமாய்க் கிரயம் பெற்றவன் கோர்ட்டேலத்தில் கிரயம் பெற்றவன்பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவரத் தடுக்கப்படுகிறுன் ; ஆனால், கோர்ட்டேலமெடுத்தவனே வாதியாக வியாஜ்ஜியம் கொண்டுவரும் பக்ஷத்தில் ஏலத்தைச் சகஜமாய்க் கிரயம் வாங்கினவன் தன் ஹக்கை ஸ்தாபித்துக்கொள்ளுவதில் தடுக்காது. இதற்கு ஆதாரம், I. L. R. 1 Allahabad 200, I. L. R. 8 Madras 511, 9 Caluctta L. R. 295 சிவில் விவகார விசாரணைச்சட்டம் மாறினபிறகு அக்காரணம் எதிர் வாதத்துக்குச் செல்லாது. ஒரு பிரத்தியேக நடவடிக்கைக்கு ஒருவருக்குத் தனியாகச் சேரும் பாத்தியதையில்லை யென்பது ஸ்பஷ்டம். இப்போது வழங்கும் சிவில் விவகார விசாரணைச் சட்டத்தின்படி இந்த வியாஜ்ஜியத்தை விமரிசிக்க வேண்டுமென்றும் நான் நினைக்கிறேன்.

சர்டிபிக்கேட் பெற்ற கிரயதார்களுடைய வார்ஸுகளுக்கும் ஒப்படை பெற்றவர்களுக்கும் விரோதமாய்த் தன்னுடைய பாத்தியதையை ருஜு செய்யச் சகஜமாய்க் கிரயம் பெற்றவர் இப்போது வழங்கும் சட்டத்தினுல் தடுக்கப்படுகிறுராவென்பது இரண்டாவது அம்சம். புதிய சட்டத்தின் 66-வது பிரிவினுல் "கோர்ட்டாரால் சர்ட்டிபை செய்யப்பட்ட கிரயத்தின்படி பாத்தியதையைக் கொண்டாடுகிற யாதொரு நபரையும்" கார்க்க இந்த விதி வியாபிக்கச் செய்யப்படுகிறது. சட்டத்தின் இந்த கருத்தைக்கொண்டு அப்பீலுக்கு இடமில்லை. அப்பீல் செலவுகளுடன் தள்ளப்பட்டது.

ALLAHABAD HIGH COURT.

அலஹபாத் ஐகோர்ட்.

S. A. No. 1684 of 1913.

1914ளு ஜுலைமீ 16உ.

ஜட்ஜ்:—சாமியர்.

டம்பார்ஸிங்கு—அப்பீல் வாதி.

v.

முராரிலாலும் மற்றவர்களும் } அப்பீல் பிரதிவாதிகள்.

லாபாயின்ட்:—ஸிவில் விவகார விசாரணை சட்டத்தின் 21-வது அதிகாரம் 88-வதுவிதி ஒரு மஹலின் பாகஸ்தர்கள் அன்னியர்களை விலக்க ஏற்படுத்தப்பட்டது. மற்றவர்க்கு முன்னே சொத்தை விலைக்கு வாங்கும் பாத்தியதையை உடத்தாயிருக்குமவருக்கு மட்டும் அந்த விதி சாரும். பாகஸ்தராக யில்லாதிருப்பவரால் அவிபக்த சொத்தின் ஓர் பாகம் உயர்ந்த விலையிடப்பட்டால் விக்கிரயம் செய்யப்பட்ட அவிபக்த சொத்தின் பாகஸ்தர் மற்றவர்க்கு முன்னே சொத்தை விலைக்கு வாங்கும் பாத்தியதையை உடையவரென்னும் விதியை அது ஸ்திரப்படுத்துகிறது.

விவகாரம்:—ஸிவில் கோர்ட்டின் டிக்ரியை நிறைவேற்றுகையில் ஒரு பட்டியின் பாகம் ஏலத்தில் விலைகூறப்பட்டது. பிரதிவாதிகள் உயர்ந்த தொகைக்கு கேட்டு, ஏலம் முடிவுபெரும் தருவாயில், வாதி அதே தொகைக்கு 21-வது அதிகாரம் 88-வது விதிப்படி பாத்தியதை உண்டென்று கூறினுர். அவருடைய பாத்தியத்தை தள்ளுகை அடைந்ததனுல், இந்த வியாஜ்ஜியத்தைச் செய்தனர். கீழ்கோர்ட்டார்களால் அனேக அம்சங்கள் பரிசீலனை செய்யப்

பட்ட போதிலும் அவிபக்த சொத்தின் பாகஸ்தருக்கு 21-வது அதிகாரம் 88-வது பிரிவின்படி சொத்துக்கு பாத்தியமுண்டாவென்பதே என்னபிப்பிராயப்படி தீர்மானிக்கவேண்டிய அம்சம். விக்கிரயம் கூறப்பட்ட பாகம் சம்பந்தப்பட்ட படியிலேயே வாதிக்கொரு பாகமுண்டு. அதே மஹலில் வேறொருப்படியில் பிரதிவாதிகளுக்கு பாகமுண்டு. அந்த கிராமம் கொஞ்ச நாளுக்குமுந்தி சரிவர பாகம் செய்யப்படவில்லை. மஹல் மொத்தத்திற்கும் விதிக்கபட்டிருக்கிற தீர்வைக்கு எல்லா பிரத்தியேகப்படிகளும் கூட்டாய் உடன்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு படிக்கும் பிரத்தியேக தீர்வை ஏற்பட்டிருப்பதினால், தானும் விற்கப்பட்ட பாகத்தின் ஸ்வான்தாரரும் 21-வது அதிகாரம் 88-வது பிரிவின்படி அவிபக்த ஸ்தாவர சொத்தில் சம பாகஸ்தர்களென்றும், பிரதிவாதிகள் அப்படி பாகஸ்தர்களல்லவென்றும் வாதம் செய்கிறார். இந்த அம்சம் I. L. R. 35 Allahabad 296 வியாஜ்ஜியத்தில் ஏற்பட்டும் தீர்மானிக்கப்படவில்லை. உயர்ந்த தொகைக்கு கேட்டவர் கிராமத்தின் கூட்டுபாகஸ்தராக விருந்தாலும் அல்லது அன்னியராகவிருந்தாலும் ‘அவிபக்த ஸ்தாவர சொத்து’ என்னும் வார்த்தைகளுக்கு ஒரே ரீதியாகவே அர்த்தத்திலேயே உபயோகிக்கவேண்டும். கூட்டு பாகஸ்தர்களுக்கு இஷ்டமிருந்தால் அன்னியர்களைத் தங்கள் மஹலிலிருந்து விலக்க இடங்கொடுப்பதே இந்த விதியின் கருத்தாக எனக்குத் தென்படுகிறது. 21-வது அதிகாரத்தின் 88-வது விதி ஒருவகைப் பாத்தியஸ்தர்களுக்கே அன்வயப்பட்டதாயும், கூட்டுப் பாத்தியஸ்தனல்லாத நபர் ஏலத்தில் உயர்ந்த தொகைக்கு அவிபாகச்சொத்தை எடுத்திருந்தால், கூட்டுபாகஸ்தராயிருப்பவர் ஏலத்தில் எடுத்தவர்களுக்கு முன்னே சொத்தை விலக்கி வாங்கும் பாத்தியதையையடையத்தக்கவரென்று விதிக்கிறது, விவாதத்திலிருக்கும் ஒவ்வொரு பாகமும் பிரஸ்தாப மஹலுக்கு விதித்திருக்கும் கிஸ்திக்கு பொறுப்புள்ளதா யிருக்கிறபடியால், இவ்விதியின் கருத்துக்கிணங்க மஹல் பூராவும் அவிபாக சொத்தென்றே நான் அபிப்பிராயப் படுகின்றேன். செலவுகளுடன் அப்பீல் தள்ளப்பட்டது. (‘மஹல்’ என்னும் பதம் கிராமத்துக்காக பஞ்சாபில் வழங்குகிறது.)

ALLAHABAD HIGH COURT.

அலஹபாத் ஐகோர்ட்.

S. A. No. 26 of 1914.

1914ஞு ஜுலைமீ 16உ.

ஜட்ஜ் :—சுந்தர்லால்.

சியோப்ரஸாத் ஸோனர்—வாதி.

v.

மங்கார் மணிஹாரும் மற்றவர்களும் } பிரதிவாதிகள்.

லாபாயின்ட் :—அனுபோக பாத்தியதையன்னியில் நாளுக்குநாள் வாதி நிலத்தில் அக்கிரமமாய்ப் பிரவேசிப்பது காலாவதி தோஷச் சட்டத்தின் 120-வது பிரிவு.

வியாஜ்ஜியச் சுருக்கம்:—பிரதிவாதிகளின் வீட்டுக் கருகாமையிலிருக்கும் கிணற்றுக்கு வாதிச் சொந்தக்காரன். தாவாவுக்கு 9-வருஷத்துக்கு முன் ஷெடி கிணற்றண்டையுள்ளப் பிரதிவாதியிலுள்ள சுவற்றில் நிலைவைத்துக் கிணற்றுத் தாழ்வாரத்தில் அக்கிரமமாய்ப் பிரவேசித்தார்கள். அருதியான அனுபோக பாத்தியதை யன்னியில் பிரதிவாதிகள் செய்யும் ஒவ்வொரு அக்கிரமப் பிரவேசமும் பிரத்தியேகமாய்த் தாவாவுக்கு விடங் கொடுக்குமென்றும், வாதியின் தாவாவுக்கு காலாவதி தோஷம் அணுகாதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

தீர்ப்பு:—பிராதுடன் தாக்கலாயிருக்கும் பிளானில் குறிப்பிட்டிருக்கும் கிணற்றுக்கு வாதி சொந்தக்காரர். கிணரிருக்கும் நிலமும் அவருடையது. கிணற்றுக்கு அண்டையில் பிரதிவாதிகளுக்கு ஒரு வீடுண்டு. தங்களுடைய சுவரில் வாசக்கால் கதவை வைத்து கிணற்றின் தாழ்வாரத்திலும் கிணர் நிலத்திலும் பிரதிவாதிகள் புழங்குவதை மறியல் செய்ய கட்டளைகள் பிறப்பிக்கவேணுமாய் வாதி தாவர்செய்கிறார். வாசக்கால் கதவு 9 வருஷங்களாயிருப்பதால், லிமிடேஷன் சட்டத்தில் 120-வது பிரிவின்படி 6-வருஷ காலத்துக்குள் வாதி தாவாசெய்யாததால் பிரஸ்தாப தாவாவுக்கு காலாவதி தோஷம் வந்துவிட்டதாக கீழ்கோர்ட்டார் தாவாவை தள்ளி விட்டார்கள். அப்பீலில், வாசக்கால் கதவை மூடுவதைப்பற்றிய பாத்தியதையை விட்டுவிட்டு, கிணற்றின் தாழ்வாரத்திலும் நிலத்திலும் பிரதிவாதிகள் புழங்கவொட்டாமல் தடுப்பதற்கால இன்ஜங்ஷன் என்னும் கட்டளையைப்பற்றி,பிரதிவாதிகள் அனுபோக பாத்தியதை யடையாததினால் லிமிடேஷன் சட்டத்தின் 23-வதுபிரிவின்படி வாதிக்குத் தாவா செய்ய வியாஜ்ஜியமூலம் உண்டென்று உறுத்திவாதஞ் செய்தனர். வாதியின் தாவா சரியானதே. வாசக்கால் கதவு 9-வருஷத்துக்கு முன் வைக்கப்பட்டதாகவும், அதின் வழியாய்க் கிணற்றின் தாழ்வாரத்தின்பேரில் முதல் தடவை அக்கிரமமாய் வரும் செய்கை அவர்கள் வீட்டுக்குமடங்கினதும் பூர்த்தியாகிறது. பிரதிவாதிகள் வாதி நிலத்தின்பேரில் ஒவ்வொரு தடவை அக்கிரமமாய் வருவதும் பிரத்தியேக செய்கையாவதினால் அந்தந்த செய்கையைத் தடுக்கப் பிரத்தியேக வியாஜ்ஜிய மூலம் வாதிக்கு ஏற்படத்தக்கதே. வீக்லீ ரிபோர்ட் 24-வது வால்யூம் 97-வது பக்கத்தில் இம்மாதிரி விவகாரம் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. பிரஸ்தாப வியாஜ்ஜியத்தில் தாவா காலத்திற்கு 6-வருஷம் முந்தின காலத்திற்குள் பிரதிவாதிகளால் செய்யப்பட்ட பிரவேசத்தைப்பற்றி தாவா கொண்டுவர வாதிக்கு பாத்தியதையுண்டு. கீழ்கோர்ட் தீர்மானத்தை ரத்துசெய்து அப்பீலை மறுபடி தாக்கல் செய்து விசாரித்து நியாயப்படித் தீர்மானிக்க உத்திரவு செய்கிறேன். இந்த அப்பீலின் செலவுகள் வாதிக்குக் கொடுக்கப்படும்.

ALLAHABAD HIGH COURT.

அலஹாபாத் ஐகோர்ட்.

S. A. No. 1401 of 1913.

1914ளு ஜூலை 4வ.

(1114-வது பக்கம்.)

ஜட்ஜ்:—சுந்தர்லால்.

சிறஞ்சிலால்—அப்பீல் வாதி

v.

பூர்ணுவும் மற்றவர்களும் } அப்பீல் பிரதிவாதிகள்.

பைபாயிட்ன்:—இந்துதேசத்து சாட்சிய ஆக்ட் 68, 69-வது பிரிவுகளின்படி ருஜுவுக்கு எழுத்தறியாத சாட்சியை விசாரிப்பதின் பலன்.

சுருக்கம்:—ஒரு அடமான பத்திரத்திற்கு ஏற்பட்ட இரண்டு சாக்ஷிகளில் ஒருவன் கைநாட்டுக்காரன். கையெழுத்திட்ட மற்றவன் தாவாகாலத்திற்குள் இறந்துவிட்டான். குறிப்பிட்ட சாக்ஷி, அடமானபத்திரம் தன் முன்னிலையில் எழுதி முடிந்ததாகவும், அடமானம் எழுதிக்கொடுத்த நபர் தன் முன்னிலையில் கைநாட்டிட்டதாகவும், தான் சாக்ஷியாக அதில் குறிப்பிட்டதாகவும் விசாரணையில் தெரிவித்தான். அவனுக்குப் பத்திரம் காண்பிக்கப் படவில்லை. சாக்ஷி கையெழுத்துப் போட்டவனை விசாரிக்க வேணுமென்பதே இந்து தேசத்துச் சாக்ஷி சட்டத்தின் 68-வது பிரி

வின் கருத்தாகையால் குறிப்பிட்டவனை விசாரித்துச் சட்டத்தின் கருத்துக்குப் போதுமானதென்று தீர்மானிக்கப்பட்டது. அடமான பத்திரத்தில் குறிப்பிட்ட சாக்ஷி, சாட்சிய சட்டத்தின் 69-வது பிரிவின்படி சாக்ஷி கையெழுத்துப் போட்ட சாக்ஷியாகிறானென்றும் தீர்மானிக்கப்பட்டது.

தீர்ப்பு:—ஒரு டிக்ரியின் நிறைவேறுவதற்காக ஒரு நிலம் ஏலத்துக்குக் கொண்டுவரப்பட்டது; அந்தக்கடனை தீர்ப்பதற்காகக் கொடுபட்ட 99 ரூபாய்க்கு, 1907-ம் வருஷம் நவம்பர் மாதம் 7-ம் தேதி யிட்ட அடமானத்தைப் பற்றி தாவா செய்யப்பட்டது. பிரதிவாதிகள் அடமானத்தை மறுதளித்ததினால் வாதி அதற்கு ருஜூவிடும்படி ஏற்பட்டது. சாட்சி சட்டத்தின் 68, 69-வது பிரிவுகளின்படி அடமான பத்திரத்திற்கு வாதி ருஜூவிடவில்லையென்று கீழ்கோர்ட்டார் தாவாவைத் தள்ளிவிட்டார்கள் ஆஸ்தி பரிவர்த்தனைச் சட்டத்தின் 58-வது பிரிவின்படி அடமான பத்திரத்திற்கு இரண்டு பேருக்குக் குறையாமல் சாக்ஷிகையெழுத்துப் போட்டிருக்கவேண்டும். அடமான பத்திரத்தில் ஒருவனுடைய கையெழுத்து மற்றொருவனுடைய குறியும் இருக்கின்றன. பத்திரம் ஏற்பட்டதற்கும், பணம் கொடுபட்டதற்கும், வாதி பிரமாணஞ் செய்திருக்கிறான் அடமானம் எழுதிக்கொடுத்த நபர் அடமான தஸ்தாவேஜில் குறிப்பிட்டதைத்தான் கண்டதாயும், தானும் அதில் குறிப்பிட்டதாயும்,குறிப்பிட்ட சாக்ஷி விசாரிக்கப்பட்டதென்றும் தெரிவித்தார். வாதி தஸ்தாவேஜூ எழுதிக்கொடுத்ததையும் பணங்கொடுத்ததையும் ருஜூ செய்தார். சட்டப்படி தஸ்தாவேஜி ருஜூப்படுத்தப் படவில்லையென்று டிஸ்டிரிக்ட் முனிசிப் தீர்மானித்தார். "சட்டப்படி தஸ்தாவேஜூ சாக்ஷி கையெழுத்து போட்டிருக்க வேண்டியதானால் கையெழுத்துப் போட்ட சாக்ஷிக்காரன் உயிரோடிருந்து, கோர்ட்டு கட்டளைக்கு உட்பட்டவனாயும் சாக்ஷியஞ்சொல்ல சமர்த்தனாயுமிருக்கிற பட்சத்தில், அது எழுதிக் கொடுக்கப்பட்டதை ருஜூப்படுத்தும்பொருட்டு அதவா சாக்ஷி கையெழுத்துப் போட்ட ஒரு சாட்சியையாவது அழைத்துக் கேட்கிறவரையில், அதை சாக்ஷியாக உபயோகிக்கக் கூடாது" என்று சாக்ஷி சட்டத்தின் 68-வது பிரிவில் கண்டிருக்கிறது. இந்த பிரிவினால் தஸ்தாவேஜை ருஜூசெய்ய சாக்ஷியை அழைக்கவேண்டு மென்பதே அந்த சாக்ஷி ருஜூ செய்யக்கூடினவனாயு மிருக்கலாம். அல்லது ருஜூ செய்யக்கூடாதவனாயு மிருக்கலாம்; தஸ்தாவேஜூ ஏற்பட்டதற்கான சந்தர்ப்பங்களை மறந்து போய்விட்டவனாயு மிருக்கலாம்; அயோக்கியமாய் தஸ்தாவேஜூ ஏற்பட்டதை மறுதளிக்கலாம்; சாக்ஷி எப்படி முடிந்த போதிலும் கையெழுத்திட்டவனை ஒருவனையாவது அழைக்கவேண்டுமென்றுப் பொருப்பையே 68-வது பிரிவினால் ஏற்படுகிறது. குறிப்பிட்டவனை அழைத்ததினால் 68-வது பிரிவின் ஷரத்தின்படி வாதி நடந்தேறிவிட்டான். குறிப்பிட்டவன் கையெழுத்தை ருஜூசெய்யக்கூடிய கையெழுத்திட்ட சாக்ஷியாகானென்று வாதிக்கக்கூடும். ஆனால் கையெழுத்திட்டவன் ஆஸ்தி பரிவர்த்தனை சட்டத்தின் 59-வது பிரிவின்படிக்கும், சாட்சிசட்டத்தின் 68-வது பிரிவின்படிக்கும், கையெழுத்திட்ட சாக்ஷியாகிறானென்று 2 கல்கத்தா வீக்லி நோட்ஸ் 603-வது பக்கத்தில் பிரான் கிருஷ்ணதிவாரிக்கும், ஜாடு நாத் திரிவேரிக்கும் ஏற்பட்ட வியாஜ்ஜியத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. பிரஸ்தாப தஸ்தாவேஜில் மற்றொரு சாக்ஷியின் கையெழுத்து அந்த சாக்ஷியால் செய்யப்பட்டதாக ருஜூவில்லையென்று முதல் கோர்ட்டாருடைய அபிப்பிராயம். கையெழுத்துப்போட்ட ஒவ்வொரு சாக்ஷியின் கையெழுத்தையும் ருஜூசெய்வது

அவசியமல்ல. தஸ்தாவேஜில் பிரத்தியக்ஷமாய் இரண்டு எழுத்திட்ட சாக்ஷிகள் ஏற்பட்டிருக்கிருர்கள். சாக்ஷிகையெழுத்துப் போட்டிருக்கிற ஒரு சாக்ஷிக்காரனையாவது கண்டுபிடிக்கக்கூடாவிட்டாலும் அல்லது தஸ்தாவேஜு யுணைடட் கிங்டம் என்னும் ராஜ்ஜியத்தில் எழுதிக்கொடுக்கப்பட்டதாக பொருள்பட்டாலும் சாக்ஷிக்காரன் போட்டிருக்கிற கையெழுத்து அவன் கையெழுத்தென்று சாக்ஷி சட்டத்தின் 69-வது பிரிவின்படி ருஜுப்படுத்த அவசிய மேற்படும். 68, 69-வது பிரிவுகளின் ஷரத்துகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கின்றன. தஸ்தாவேஜை குறிப்பிட்ட சாக்ஷிக்குக் காட்டி எழுதிக் கொடுத்தவர் கையெழுத்தையும், சாக்ஷி யிட்டவருடைய கையெழுத்தையும் ருஜு செய்யாமல் போனதினுல் சாக்ஷிக்குறைவுக்கு இடமுண்டாயிற்று. 12 பம்பாய் லா ரிபோர்ட் அனுபந்தம் 18-வது பக்கத்தில் நீல்கண்டோ பண்டிட்டுக்கும், ஜக்கோபந்து கோஷுக்கும் ஏற்பட்ட வியாஜ்ஜியத்தில் தஸ்தாவேஜை ருஜு செய்யும் வழி வரையிடப்பட்டிருக்கிறது. வாதி வக்கீலினுல் செய்யக் குறைவுபட்டதைக் கோர்ட்டார் செய்விக்க வேண்டும். (12 அலகாபாத் லா ஜர்னல் 371-வது பக்கம்) பக்ஷிராமுக்கும் லீலாதாருக்கும் ஏற்பட்ட வியாஜ்ஜியத்தில் இவ்வியாஜ்ஜியத்தின் சந்தர்ப்பங்களேற்பட்டுத் தஸ்தாவேஜை ருஜுசெய்ய வாதிக்கு இடம் கொடுப்பதற்காக வியாஜ்ஜியத்தைக் கீழ்கோர்ட்டாருக்கு அனுப்புவது உசிதமென்று எண்ணப்பட்டது. பாபு கங்கப்பிரஸாதுக்கும் பாபு இந்திரஜித் சிங்கிக்கும் (23 வீக்லி ரிபோர்ட் 390) பிரிவி கௌன்ஸலார் இம்மாதிரியே செய்தனர். தஸ்தாவேஜை ருஜு செய்ய மற்ருெரு தடவை வாதிக்கு இடங்கொடுப்பது நியாயமென்று நான் நினைக்கிறேன். கீழ்கோர்ட்டார்களால் இந்த வியாஜ்ஜியம் செவ்வையாய் விசாரிக்கப்படவில்லை. சிவில் விவகாரவிசாரணை சட்டத்தின் 41-வது அதிகாரம் 23-வது விதிப்படி கீழ்கோர்ட் டிக்ரியை ரத்துசெய்து, நியாயப்படி கேஸை விசாரித்து முடிவுசெய்ய இந்தக் கேஸை நான் அனுப்புகிறேன் வாதி அல்லது வாதியின் வக்கீலினுல் தஸ்தாவேஜை ருஜுசெய்ய லோபம் ஏற்பட்ட காரணத்தைக்கொண்டு இந்த கோர்ட்டிலும் கீழ் அப்பீல் கோர்ட்டிலும் செலவை வாதியே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் உத்திரவு செய்கிறேன். முதல் கோர்ட்டு செலவுகள் வியாஜ்ஜியத்தின் செலவுகளாக ஏற்படும்.

ALLAHABAD HIGH COURT.

அலஹபாத் ஐகோர்ட்.

S A. No 1144 of 1913.

1914ஷ ஜூலைமீ 14உ.

(1133-வது பக்கம்.)

ஜட்ஜ் :—சாமியர்.

டியோசண்ட்—அப்பீல் வாதி

v.

பியரியும் மற்றவரும்—அப்பீல் பிரதிவாதிகள்.

லாபாயின்ட்:—1877-ம் வருஷத்திய 3-வது சட்டமாகிய ரிஜிஸ்ட்ரேஷன் ஆக்ட்டின் 17-வது பிரிவு.

சுருக்கம்:—ஒரு வீட்டையும் சில தோப்புகளையும் ஈடுகாட்டிய ஓர் அடமான பத்திரம் வாதிபேருக்கு 1874-ல் ஏற்பட்டது. 1877-ல் அடமான பத்திரம் எழுதிக் கொடுத்தவர்கள் அடமானம் பெற்றுக்கொண்டவர்களுடன் ஏற்பாடு செய்துகொண்டு தோப்புகளைமட்டும் வட்டிக்குப் பதிலாக அடமானம் பெற்றவர்களுக்கு ஸ்வாதீனம் செய்து வரும்படிகளை அனுபவிக்கும்படிச் செய்தனர். இந்த ஏற்பாட்டைச் செப்பி ரெவினியு கோர்ட்டாருக்கு மனுக்கள் தாக்கலாயின. அடமானம் பெற்றுக்

கொண்டவர்களும் ஸ்வாதீனஞ் செய்துகொண்டனர். 1877-ம் வருஷத்தில் நடந்த ஏற்பாடு ரிஜிஸ்டராகாத காரணத்தால் ஸ்வாதீன அடமான பாத்தியதையை யுண்டாக்காதென்றும், வட்டி செலுத்தலுக்குச் செய்யப்பட்ட ஏற்பாடாக தோன்றுமென்றும், 1874-ம் வருஷத்திய ஈடு கடன் பத்திரத்தை யனுசரித்துச் சொத்தைத் தாவா விற்பனைக்குக் கொண்டுவர தாவா செய்யவேண்டுமென்று தீர்மானிக்கப் பட்டது.

வியாஜ்ஜிய விவரம்:—1874-வது வருஷம் நவம்பர்மாதம் வாதி பேருக்கு 3 தோப்புகளையும் ஒரு வீட்டையும் ஈடுகாட்டி அடமானப் பத்திரம் எழுதிக்கொடுத்தான். 1877-வது வருஷம் நவம்பர் மாதத்தில் வாதிக்கு ரூ. 571 பிரதிவாதிகள் கொடுக்கும்படி ஏற்பட்டது. பிரதிவாதிகளில் ஒருவர் ஒரு தோப்பை வாதிக்கு ரூ. 130-க்கு விற்றுவிட்டு, மீதி கடன் பாக்கி ரூ 441-ன் பேரில் ஏற்படும் வட்டிக்காக 10 வருஷத்திற்கு மற்ற இரண்டு தோப்பின் வரும்படி அனுபவிக்கச்செய்ய அத்தோப்புகளை வாதி ஸ்வாதீனம் செய்துவிட்டதாகவும் 10 வருஷகாலம் கழிந்தபின் ஒரு வருஷத்திற்குள் பிரதிவாதிகள் சொத்தை மீட்டுக்கொள்ளாத பக்ஷத்தில் வாதி கொதுவை மீட்சி பாத்தியதை அற்றுப்போகக் கேட்க தக்கவரென்றுங்கண்டு ரெவினியு கோர்ட்டாரிடம் மனுக்கள் தாக்கல் செய்தார்கள். அடமானம் பெற்றவர்கள் அப்படிக்கே ஸ்வாதீனம் கொடுக்கப் பெற்றுச் சொத்தைத் தங்கள் ஸ்வாதீனத்திலேயே வைத்து வந்தார்கள். முதல் ஈடுகடனை யனுசரித்து இரண்டு தோப்புகளையும் ரூ. 441-க்கு விற்பனை செய்யவேண்டுமென்று பிரஸ்தாப தாவா கொண்டுவரப்பட்டது விசாரணை செய்த கோர்ட்டார் வாதி தாவா சரியல்லவென்று தள்ளிவிட்டார்கள். அப்பீலைப் பரிசீலனை செய்த ஸபார்டினேட் ஜட்ஜ், 1877-வது வருஷத்தில் நடந்த ஏற்பாடு ஈடுபத்திரத்தை ஸ்வாதீனக்கடன் பத்திரமாக மாற்றிவிட இடம் உண்டாகியதென்றும், ஈடுகடன் பத்திரத்தின் பேரில் தாவா செல்லத் தக்கதல்ல வென்றும் தீர்மானித்தார். 1877-வது வருஷத்திய கிரந்தம் ஈடு கடன் பத்திரத்தை ரத்துசெய்துவிட்டது ஸ்பஷ்டமென்று நான் நினைக்கிறேன். முதலில், ஈடிலிருந்து வீட்டை விலக்கிவிடப்பட்டது; இரண்டாவது, ரெவினியு கோர்ட்டாரிடம் தாக்கலான மனுக்களால் அடமானம் பெற்றவர்கள் அடமானத்தைத் தீர்த்துக்கொள்ளாவிட்டால் மனுக்களை யனுசரித்து அடமானம் பெற்றவர்களுக்கு கொதுவை மீட்சி பாத்தியதை யற்றுப்போக உபய கக்ஷிக்காரர்களும் எண்ணங்கொண்டார்கள்; கடைசியாக, மனுக்களை எவ்விதமாக அர்த்தம் செய்தபோதிலும் ஈடுபத்திரத்தின்பேரில் தாவா செய்யும் பாத்தியதையை நிறுத்திவைக்கப்பட்டது.

ஸ்வாதீன கடன் பத்திரமாக எண்ணப்படும் மனுக்கள் ரிஜிஸ்டர் செய்யப்படவேண்டியவைகளாவென்று பரிசீலிக்கவேண்டியிருக்கிறது. அம்மனுக்கள் ரிஜிஸ்டர் செய்யப்படவேண்டியவை யென்றும், அடமான சொத்து ரிஜிஸ்டிரேஷன் ஆக்டின்படி ஸ்திராஸ்தியாயிருந்து ரூ. 100-க்கு அதிகப்பட்ட மதிப்புள்ளதாயிருந்தால் ஸ்வாதீனக்கடன் பத்திரமாக எண்ணப்படக்கூடாதென்றும் நான் அபிப்பிராயப்படுகிறேன். மரங்கள் அல்லது தோட்டங்களுடைய பாத்தியங்களை யடைமானத்திற் குள்ளாக்காமல் தோட்டங்களின் நிலமே அடமானத்திற்குள்ளாக்கப்பட்டதென்று ஏற்படுகிறது. ஸ்வாதீன அடமான பாத்தியத்தின் மதிப்பு ரூ.100-க்கு அதிகமாயிருக்கிறது. இக்காரணங்களைக் கொண்டு 1877-வது வருஷத்தில் செய்துகொண்ட வரலாற்றினால் ஸ்வாதீன அடமான பாத்தியம் ஏற்படுத்தப்படமாட்டாதென்றும், வட்டிக்காகவே செய்த ஏற்பாடென்றும் நான்

தீர்மானிக்கிறேன். முடிவில் அப்பீல்வாதி, ஆதியிலேற்பட்ட ஈடுகாட்டிய அடமானப் பத்திரத்தின் பேரில் வியாஜ்ஜியம் செய்துகொள்ளத் தக்கவரா? அப்பீலை அங்கீகரித்து முதல் அப்பீல் கோர்ட்டாருடைய தீர்மானத்தை மாற்றுகிறேன். கேஸை கிரமப்படி விசாரித்துத் தீர்ப்புச்செய்ய அக்கோர்ட்டுக்கே அனுப்பப்பட்டது.

ALLAHABAD HIGH COURT.

அலஹாபாத் ஐகோர்ட்.

F. A. No. 268 of 1912.

1914௵ ஜூலை௴ 6௳.

(1137-வது பக்கம்)

ஜட்ஜிகள் :—ரிச்சொர்டு, சீப்ஜஸ்டி டட்பால்.

ஆக்ரா முனிசிபல் போர்ட்டும் மற்றொருவரும் } பிரதிவாதிகள்.

v.

சுதர்சன் தாஸ் சாஸ்திரி—வாதி.

லாபாயின்ட் :—சரளிட்டதாயினும் சரளிடதாயினும் ஜனங்களின் வழிநடை பாத்தியதைக்குட்பட்ட எல்லா பூமியும் பகிரங்கமான பாட்டையாகின்றது.

வியாஜ்ஜிய விவரம்:—கீழ்கோர்ட்டார் ஏற்படுத்தின விவாதாம்சம் என்னவென்றால், தாவா நிலங்களுக்கு வாதி சொந்தக்காரரும் ஸ்வாதீனதாரருமா, அல்லது ஷை நிலங்கள் முனிசிபல் போர்ட்டுக்குச் சொந்தமான பாட்டையில் சேர்ந்ததா ? பாட்டையில் சேர்ந்திருந்தால் அவைகளின் விஸ்தீரணமென்ன ? ஹாகர்கள் வழக்கமாயிருந்து வியாபாரஞ் செய்வதாக வாதி குறிப்பிடும்டம் பாட்டையில் சேர்ந்ததல்லவென்று கீழ்கோர்ட்டார் மேற்சொல்லிய வியாஜ்ஜியாம்சத்தைப்பற்றி முடிவான அபிப்பிராயத்துக்கு வந்தனர். சரளிட்டிருக்கும் பாகமே பாட்டையென்று சொல்லக்கூடும் என்கிற அபிப்பிராயத்தை அக்கோர்ட்டார் வகித்ததாகத் தெரியவருகிறது. எங்களுடைய அபிப்பிராயத்தில் இது பிசகு. நக்ஷாக்களினாலும், உபய கக்ஷிக்காரர்கள் சொல்லிய அம்சங்களினாலும் ஹாகர்கள் உட்காருமிட மின்னதென்று எங்களுக்குக் குறிப்பிட சாத்தியமில்லை; ஆனால் சரளிடப்பட்டிருந்தாலும் இல்லாவிட்டாலும் ஜனங்களுக்கு வழிநடை பாத்தியத்திற்குள்ள விடம் சரளிடப்பட்ட விடத்தைப்போல பாட்டையாகுமென்று எங்களபிப்பிராயம். அனாதியாய் ஜனங்கள் நடக்க வழக்கப்பட்ட இடம் பொதுவீதி அல்லது பாட்டையாகுமென்றும், அதில் ஒருபாகம் போக்குவரத்துக்கு அதிக சௌகரிய மேற்படுவதற்காக சரளிடப்பட்டிருக்குங் காரணத்தால், இரண்டு பக்கத்திலும் சரளிடாதிருக்கும் பாகம் பாட்டையில் சேராது போகாதென்றும் கோர்ட்டார் ஊகிக்கத் தக்கவர்கள். இந்த விவரணத்தோடு தாவா நிலம் பாட்டையின் பாகமா அல்லவா வென்கிற விவாதம்சத்தை யேற்படுத்தி விமரிசைக்குக் கீழ்கோர்ட்டாருக்கு அனுப்புகிறோம்.

ALLAHABAD HIGH COURT.

அலஹாபாத் ஐகோர்ட்.

(லா ஜர்னலிலிருந்து எடுக்கப்பட்டது. பக்கம் 1136.)

கிரிமினல்ரிவிஷன் நெ. 579 of 1914.

1914௵ ஜூலை௴ 17௳.

ஜட்ஜ் :—சாமியர்.

கோபின்ட் சஹையும் மற்றொருவரும் } மனுதார்கள்.

v.

இந்தியா சக்கிரவர்த்தி.

லாபாயின்ட்:—குற்ற விசாரணை சட்டத்தின் 107-வது பிரிவின்படிக்கான விவகாரத்தை விசாரிக்க அதிகாரம் பெற்றிருந்த இர

ண்டாவது க்ளாஸ் மாஜிஸ்ட்ரேட்டுக்கு மாற்ற ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டுக்கு அதிகாரமில்லை.

வியாஜ்ஜிய விவரம்:—ஓர் 2-வது வகுப்பு மாஜிஸ்ட்ரேட் மனுதார்களை ஒரு வருஷகாலத்திற்கு நன்னடக்கைக்காக ஜாமீன் கொடுக்கும்படி உத்திரவு செய்தார். அவ்வுத்திரவின் பேரில் மனுதார்கள் செய்துகொண்ட அப்பீலை ஜில்லா மாஜிஸ்ட்ரேட் தள்ளிவிட்டார். மனுதார்கள் ஐகோர்ட்டுக்கு ரிவிஷன் மனுகொடுத்துக் கொண்டார்கள்.

இரண்டாவது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுக்கு கேஸை விசாரிக்க அதிகாரமில்லை யென்பது முதல் அம்சம். இந்த விவகாரம் 1-வது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டினால் ஆரம்பிக்கப்பட்டு அதை விசாரிக்கத்தக்க வேறு மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டாருக்கு அனுப்பிவிடும் பொருட்டு டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ரேட்டுக்கு மாற்றப்பட்டது. டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் ஒரு 2-வது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டிடம் அனுப்பிவிட்டார். குற்றவிசாரணை சட்டம் 526-வது பிரிவின்படி முதலில் விசாரணைக்கடுத்த கோர்ட்டின் அதிகாரத்திற்குச் சமமாய் அல்லது உயர்ந்த அதிகாரமுள்ள கோர்ட்டாருக்கு மாற்ற ஐகோர்ட்டுக்கு அதிகாரமுண்டு. இக்கோர்ட்டார் 2-வது கிளாஸ் மாஜிஸ்ட்ரேட்டிடம் மாற்றவில்லை; இக்கோர்ட்டார் செய்யக்கூடாத மாற்றலை டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் செய்ய அதிகாரமில்லை. விசாரணை செய்யக்கூடிய கோர்ட்டைத் தெரிந்தெடுக்க இக்கோர்ட்டார் கேஸை மாற்றிவிட்டார்கள். குற்றவிசாரணை சட்டத்தின் 110 முதல் 119 வரையிலுள்ள பிரிவுகளின்படி 2-வது வகுப்பு மாஜிஸ்ட்ரேட் அதிகாரங் கொடுக்கப் பெற்றிருக்கவில்லை. இக்காரணங்களைக் கொண்டு மனுதார்களிடம் நன்னடக்கைக்கு ஜாமீன் வாங்கும்படி உத்திரவுசெய்ய 2-வது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுக்கு அதிகாரமில்லை. ஆகையால், 2-வது வகுப்பு மாஜிஸ்ரேட், டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் இருவர்செய்த நடவடிக்கைகளை நான் ரத்துசெய்கிறேன்.

ALLAHABAD HIGH COURT.

அலஹபாத் ஐகோர்ட்.

(இந்தியன் லா ஜர்னலிலிருந்து பக்கம் 995.)

கிரிமினல் ரெபரன்ஸ் நெ. 196 of 1914.

1914ளு ஏப்ரல்மீ 8வ.

ஜட்ஜ்:—சாமியர்.

மஹாகினியா—அப்பீல் வாதி

v.

ராம்சரான்—அப்பீல் பிரதிவாதி.

லாபாயின்ட்:—ஒரு டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் குற்றவிசாரணை சட்டத்தின் 438-வது பிரிவின்படி விவகாரத்தைச் சீர்திருத்த புதிதாய் சாட்சிகளை விசாரிக்க அதிகாரமில்லை.

விவரம்:—பிரதி வாதியால் பிறந்ததாகச் சொல்லும் இரண்டு குழந்தைகளுக்கு ஜீவனாம்சத்திற்காக வாதியாக வைப்பாட்டி ஜாயின்ட் மாஜிஸ்ட்ரேட்டிடம் மனுசெய்துகொண்டாள். அக்குழந்தைகளுக்குப் பிரதிவாதி தகப்பனென்று வாதி ருஜுசெய்யத் தவறிவிட்டக் காரணத்தைக் கொண்டு மனு தள்ளுபடி செய்யப்பட்டது. ரிவிஷன் மனுவின்மேல் குறித்த அம்சத்தைப்பற்றி அமிதமான சாக்ஷியிருப்பதாகச் சொல்லபட்டிருந்தது. குற்றவிசாரணை சட்டம் 435-வது பிரிவின்படி ரிகார்ட்டை வருத்தி மனுதாரியையும் சாக்ஷியங் கொடுக்கச் செய்தேன். அச்சாக்ஷியம் பிரதிவாதி எதிரில் எடுக்கப்பட்டது. பிரதிவாதியைத் தன் தரப்பில் சாக்ஷியங் கொடுக்கச்சொல்லியும் கொடுக்கவில்லை. இப்போது ஏற்பட்ட சாக்ஷியத்தைக் கொண்டு அக்குழந்தைகளுக்குப் பிரதிவாதி தகப்பனென்று திருப்தியாக யேற்படுகிறது. அம்மைகுத்தும் ரிஜிஸ்டரில் பிரதிவாதியே தகப்பனாகக் கண்டிருக்கிறது; பிரதிவாதிக்கு

எதிரில் கற்பழிக்க வேண்டுமென்கிற வாதியின் எண்ணம் நிறைவேருமல் போய்விட்டதைப் பற்றி வாதியுடன் பேசினதாக ஒரு போலீஸ் ஹெட் கான்ஸ்டபிலும் சாக்ஷியங் கொடுத்தான். ரெயில்வே ஸ்டேஷனில் சாமான்களிறக்குமிடத்தில் பிரதிவாதியுடன் வேலைசெய்யும் பாபுவும் பிரதிவாதியின் ஜாதியாராகிய இன்னும் இருவரும் அக்குழந்தைகளுக்குப் பிரதிவாதி தகப்பனென்றே மொழிந்தனர். வாதி ஏழையாயிருப்பதால், அவளுடைய தாவா நிஜமாயிராவிட்டால் இச்சாக்ஷியம் எல்லாவற்றையும் ருஜூ செய்ய அவளுக்கு இடமிருக்குமென்று நினைக்க இடமேயில்லை. அவள் தாவா உண்மையென்றும், அவள் ஜீவனும்சம் பெறத் தக்கவளென்றும் திருப்திகரமாய் எனக்குத் தென்படுகிறது. ஆகையால் ஜாயின்ட் மாஜிஸ்ட்ரேட் தீர்மானத்தை மாற்றி வாதிக்கு அவள் குழந்தைகளுக்கு மாதம் 1-க்கு 3-ரூபாய் கொடுக்க உத்திரவாகும்படி சிபார்சுசெய்து குற்ற விசாரணை சட்டம் 438-வது பிரிவின்படி ஐகோர்ட்டாருக்கு அனுப்புகிறேன்.

தீர்ப்பு.

டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டின் சிபார்சு பூராவும் அங்கீகரிக்கப்பட மாட்டாது; குற்ற விசாரணை சட்டம் 438-வது பிரிவின்படி சாக்ஷியத்தைச் சேகரிக்க அவருக்கு அதிகாரம் கொடுத்திருக்கவில்லை; அப்படி சாக்ஷியத்தைச் சேகரிக்க அதிகாரம் கொடுத்திருந்தால் இக்கோர்ட்டுக்குச் சிபார்சு செய்யவேண்டும் பொருட்டே. ஆகையால் அதின்பேரில் குழந்தைகளுக்கு ஜீவனும்சத்தை உத்திரவு செய்வது யுக்தமல்ல. ஆனல் ஜாயின்ட் மாஜிஸ்ட்ரேட் முன்னிலையில் இன்னுமதிக சாக்ஷியம் ஆஜர்படுத்தக்கூடும், படித்திருக்கவேண்டும். பூர்த்தியாய் விசாரிக்க உத்திரவு அளிப்பதற்கு டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டினுடைய ரிபோர்ட்டில் இடமிருக்கிறது. ஜாயின்ட் மாஜிஸ்ட்ரேட்டின் உத்திரவை ரத்துசெய்து அவரால் புனர் விசாரணை செய்விக்கும்படி நான் உத்திர செய்கிறேன்.

PUNJAB CHIEF COURT.

பஞ்ஜாப் சீப் கோர்ட்.

Case No. 928 of 1913.

1913ஹ அக்டோபர்மீ 20உ.

(993-வது பக்கம்.)

ஜட்ஜிகள்:—ராட்டிகான்.

சிவில்.

மூலாமல் .... மனுதார்.

v.

சுரஞ்சீலால் .... பிரதிவாதி.

ல்ாபாயின்ட்:—மத்தியஸ்தர் விசாரணையில் செய்யப்பட்ட குற்றத்திற்கு சாங்ஷன்.

வியாஜ்ஜியச் சுருக்கம்:—மத்தியஸ்தர் விசாரணையில் I. P. C (இ. பி. கோ.) 193, 471-வது பிரிவுகளின்படி ஒருவனை விசாரணைக்குக் கொண்டுவர அனுமதி பெறவேண்டியது அவசியம்.

தீர்ப்பு.

வாதிக்கும் பிரதிவாதிக்கும் விவில் தாவா ஏற்பட்டு மத்தியஸ்தரால் விசாரிக்கப்பட்டு முடிவுபெற்றது. இ. பி. கோ. 193, 471-வது பிரிவுகளின்படி மனுதாரன்பேரில் பிரதிவாதி பிரியாது கொடுத்து, அக்குற்றங்கள் மத்தியஸ்தரின் விசாரணையில் நடத்தப்பட்டதாகத் தெரிவித்தார். குற்ற விசாரணை சட்டம் 195-வது பிரிவின்படி மேற்சொல்லிய பிரியாதுக்குக் கோர்ட்டாருடைய அனுமதி பெறவேண்டுமென்று மனுதார் ஆக்ஷேபித்தார். இவ்விஷயத்தில் அனுமதி வேண்டியதில்லையென்று மனுதாரனுடைய ஆக்ஷேபனை தள்ளுபடி செய்யப்பட்டது. மதராஸ் லா ஜர்னல் 17-வது வால்யூம் 420-வது பக்கத்தில் செப்பியிருக்

கும் புட்டய்ய செட்டிக்கும், வீராசாமி முதலிக்கும் நடந்த வியாஜ்ஜியத்தின் தீர்மானத்தைக்கொண்டு இம்மாதிரி பிரியாதுகளில் கோர்ட்டாருடைய முந்தி அனுமதி அவசியமென்று ஸ்பஷ்டமாய் ஏற்படுகிறது. ஸிவில் விவகார விசாரணை சட்டத்தின் 2-வது அனுபந்தம் 10-பாராவின்படி மத்தியஸ்தர் முன்பாக ஏற்படும் வாக்கு மூலங்களும் தாஸ்தா வேஜுகளும் மத்தியஸ்தரின் தீர்ப்புடன் கடைசியாக கோர்ட் ரிகார்ட்டுகளினுடன் தாக்கல் செய்யப்படுகிறது. மதராஸ் ஐகோர்ட்டின் தீர்ப்பை அனுசரிப்பதில் எங்களுக்கு ஐயமில்லை. அனுமதி அவசியமென்றே தீர்மானிக்கிறோம் மனுவை அங்கீகரித்து மாஜிஸ்ட்ரேட் உத்திரவை ரத்து செய்து அனுமதியில்லாத பிரியாதைத்தள்ளுபடி செய்கிறோம்.

CALCUTTA HIGH COURT.

கல்கத்தா ஐகோர்ட்.

(பக்கம் 17, வால்யும் 19.)

கிரிமினல் அப்பீல் நெ. 341.

1913௵ மார்ச்மீ 12௳.

ஜட்ஜிகள்:—வுட்ராப்
பீச்கிராப்ட்.

ரொமேஷ் சந்திர பானர்ஜி—அப்பீல்வாதி.

v.

இந்தியா சக்கிரவர்த்தி—பிரியாதி.

லாபாயின்ட்:—இ. பி. கோ. 399, 402-வது பிரிவுகளின்படிக்கான குற்றங்களின் விமரிசை செய்வதில் அஸெஸ்ஸர்களுக்கு நியாயாதிபதி கேள்விகள் கேட்டது. குற்றப் பத்திரிகையில் கண்ட சாக்ஷிகளை வாதி தரப்பில் பூராவாய் விசாரிக்காமல் விட்டுவிடுவது போலீஸாரால் செய்யப்படுஞ் சோதனையில் மாஜிஸ்ரேட்டு இருப்பதின் பலன்.

வியாஜ்ஜிய விவரம்:—பலர்கூடிக் கொள்ளையடிக்க ஆயத்தம் செய்வது அல்லது சேர்ந்து கொள்ளையடிக்கும் பொருட்டு ஐமைகூருவது என்னும் குற்றத்திற்கு எதிரிகள் 1912-வது வருஷம் நவம்பர்மீ 1௳ குற்றம் நடத்தினதாக விசாரணைக்குக் கொண்டுவரப்பட்டார்கள். ஸெஷன் கோர்ட்டில் இரண்டு குற்றங்களுக்கும் விசாரிக்கப்பட்டார்கள். நியாயாதிபதியும் அஸெஸ்ஸர்களும் எதிரிகள் இ. பி. கோ. 399-வது பிரிவின்படி சொல்லப்பட்டபடி பலர் கூடிக் கொள்ளையடிக்க ஆயத்தம்பண்ணியதில் கூட்டத்தில் சம்பந்தப்பட்ட ஒவ்வொருவனும் ஆயத்தஞ்செய்வது, ஆயுதங்களைச் சேகரிப்பது, முதலிய செய்கைகளில் ஒவ்வொரு நபரும் எச்செய்கையைச் செய்தானென்று ருஜு கொடுக்கவேண்டுமென்றும், எதிரிகள் கூடியமட்டும் 399-வது பிரிவின்படி குற்றவாளிகளாக மாட்டார்களென்றும், நியாயாதிபதி அபிப்பிராயப்பட்டார். பிரஸ்தாப விவகாரத்தில், எதிரிகள் பெரிய குற்றத்திற்குக்கூட சிட்சிக்கப்படத் தக்கவர்களல்லவா வென்பதல்லாமல் சிறிய குற்றத்திற்கு அவர்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனை சரியானதல்லவா வென்பதே விமரிசிக்கவேண்டிய அம்சம். எதிரிகள் இ பி. கோ. 402-வது பிரிவின்படி குற்றவாளிகளல்லவென்று அஸெஸ்ஸர்கள் அபிப்பிராயப்பட்டார்கள். இச் சந்தர்ப்பத்தில் அஸெஸ்ஸர்களைப் பல கேள்விகள் கேட்டு நியாயாதிபதி அவர்களின் அபிப்பிராயத்தை யறிந்த விஷயத்தைப்பற்றி ஆக்ஷேபிக்கப் பட்டது நியாயாதிபதி அஸெஸ்ஸர்களினபிப்பிராயத்தை அவர்களின் வாசா முதலிலறிந்து பின்பு அவர்களபிப்பிராயத்திற்கு ஏதுவாக நியாயாதிபதி கேள்விகளைக் கேட்டிருக்கவேண்டும். 1, 5, 6, 10 எதிரிகள் அவர்களுடைய நடத்தையைப்பற்றித் திருப்திகரமாய்ச் சமாதானஞ் சொல்லியதாக அஸெஸ்ஸர்கள் அபிப்பிராயப்பட்டு மற்ற 8 எதிரிகளும் ஒன்றுகூடியது

அநீதி அல்லது அசாஸ்திரமென்றும், மற்றொருவர் துன்பமென்றும் தெரிவித்தனர். எப்படி யாலோசித்தபோதிலும் அவர்களுடைய முடிவான அபிப்பிராயத்தை வியாஜ்யாமிசங்களுடன் ஒத்திடுவது துர்லபமாயிருக்கிறது கொஞ்சம் துன்பமோ அல்லது நியாய விரோதமா வென்னமோ இருப்பதாக சாக்ஷியத்தின் படி ஆரோபிதஞ் செய்ய அஸெஸ்ஸருக்கு உசிதமாயிருக்கும். அச்சாக்ஷியம் அங்கீகாரப் படாவிட்டால் அந்த அபவாதத்திற்கு நியாயமான காரணமில்லை. அச்சாக்ஷியம் அங்கீகாரப்பட்டால் ஆயத்தமோ, கொள்ளையை நடத்தக்கூடியதோ என்றும் எண்ணத்தை ஸ்பஷ்டமாய் சாக்ஷியமே வெளியாக்கும். அச்சாக்ஷியத்தினுண்மையை நியாயாதிபதி அங்கீகரித்து, அவ்வங்கீகாரத்துக்கு அனுகுணமாய் 402-வது பிரிவின்படி எல்லா எதிரிகளும் குற்றவாளிகளென்று தீர்மானித்தார். 399-வது பிரிவின்படி எதிரிகளை நியாயாதிபதி விடுதலை செய்ததால், 402-வது படிக்கான குற்றத்திலிருந்தும் விடுதலைசெய்ய இடம் கொடுத்துவிட்டதென்றும், பின்சொல்லிய குற்றத்திற்கு விதிக்கப்பட்ட தண்டனை செல்லாதென்றும் சொல்லப்படுகிறது. இந்த ஆக்ஷேபணையில் சாரமில்லை. ஆயுதங்களைக் கண்டுபிடித்தவிடத்தில் எதிரிகள் கூடவில்லை என்னுங் காரணத்தைப் பொருத்தல்ல; 402-வது பிரிவின்படி தண்டனைக் குள்ளாக்கும்படியான கூட்டமாயிருந்தபோதிலும், 399-வது பிரிவின்படி ஆயத்துக்குப் போதுமான சாக்ஷியமில்லை யென்பது நியாயாதிபதியின் அபிப்பிராயம். இந்த விவகாரத்திற்கு I. L. R. 40, கல்கத்தா 163-வது பக்கத்தில் நைஸா முடினுக்கும் சக்கிரவர்த்திக்கும் நடந்த வியாஜ்ஜியத்தின் தீர்மானமே ஆதாரமாகும். சட்டத்தின்படி கொள்ளையடிப்பது, அதற்கு ஆயத்தம், அந்த எண்ணத்தோடு கூடுவதென்று கொள்ளையென்றும் குற்றம் மூவகைப்பட்டிருக்கிறது. முதல் இரண்டும் கொடுமையான குற்றங்களென்றும், ஆயத்தம் முன் குற்றங்களில் குறைந்ததென்றும், கூடுதல் எல்லாவற்றிற்கும் குறைந்ததாகவும், அவ்வவைகளுக்கு ஏற்பட்ட தண்டனைகளினால் தெரியவருகின்றது. கொள்ளையடிக்கக்கூடுவதே கொள்ளைக்கு ஆயத்தமாகலாம். கூடினதற்குமேல் ஆயத்தம் செய்யாதது 399-வது பிரிவுபடிக்கான ஆயத்தமாகமாட்டாது; அப்படிக்கானால் 402-வது பிரிவு நிஷ்பிரயோஜனமாயிருக்கும். நியாயாதிபதியின் முடிவான அபிப்பிராயத்தில் விபரீதம் ஏதாவது யிருப்பதாகக் காணப்படவில்லை. சொல்ப குற்றத்திற்கே நியாயாதிபதி எதிரிகளை சிட்சித்திருக்கிறார்

1912-வது வருஷம் அக்டோபர்மீ 12உ யில் சப் இன்ஸ்பெக்டரின் 13 வயதுள்ள குமாரன் பெயருக்கு ஓர் கடிதம் கிடைத்தது. சப் இன்ஸ்பெக்டரின் வேலைக்காரனால் அக்டோபர் மாதம் 28-ம் தேதி அக்கடிதம் இன்ஸ்பெக்டருக்குக் காண்பிக்கப்பட்டு, சூப்பரிண்டெண்டுக்குத் தெரிவிக்கப்பட்டது. நவம்பர்மீ முதல்தேதியில் ஒரு கொள்ளை நடத்தப்படுமென்று தன் தகப்பனுக்குத் தெரிவிக்கச் சொல்லி எழுதி யிருந்தது. அதனால் நவம்பர்மாதம் முதல்தேதி தனக்கு அதிக கான்ஸ்டேபில்களும், இரண்டு ஹெட் கான்ஸ்டேபில்களும், வேண்டுமென்று போலீஸ் சூப்பரிண்டெண்டுக்கு ஸப் இன்ஸ் பெக்டர் தெரிவித்து, இரவு பந்தோபஸ்துக்கு 10 பேர்கள் அனுப்பப்பட்டார்கள். நவம்பர்மீ முதல்தேதி இரவு $10\frac{1}{2}$-மணிக்கு மழை பொழிந்துகொண்டிருக்கையில் இரண்டு கான்ஸ்டேபில்கள் 2-பேரைக் கண்டு சந்தேகிக்கப்பட்டு, பதில் சொல்லாமல் போய்க்கொண்டிருந்தவர்களை ஒரு ஜவான் அவர்களைத் துரத்தி சந்தேகித்துக்கிடமான ஒருவனைப் பிடித்துக்கொண்டான். பிடித்துக கொண்ட ஜவானை, பிடிபட்டவனோ அல்லது அவனுடன் வந்த மற்றொருவனோ கையில்

பலமா யடித்ததைக் கொண்டு பிடிபட்டவன் விட்டுவிடப்பட்டான். பிடித்துக் கொண்டவனும் மற்றொருவனும் பாட்டை வழியாய் ஓடி ஒரு குடிசையிடம் போய் எதிரிகளைக் கண்டார்கள். இவர்களுக்குப்பின் 7-8-பேர்களும் வந்தார்கள். பின்பு ஸப் இன்ஸ்பெக்டர்களும் ஹெட் கான்ஸ்டேபில்களும் குடிசையிடம் போய்ப்பார்க்க அங்கு கொசுவலையுடன் ஒரு கட்டிலும், கட்டிலின்மேல், 6-7 பேர்களும், கீழண்டை பாகத்தில் இருவரும், எல்லோருக்கும் இடுப்பில் கட்டியிருந்த துணி நனைந்தும், கட்டிலருகிலிருக்கும் கூடையில் இரண்டாய்ப் போன ஒருதுப்பாக்கியும், குடிசையின் கூரையில் சில பைகளும், 2-அரிவாள்களும், துணிகளில் சில தோட்டாக்களும், தடிகளும் கண்டு பிடிக்சப்பட்டன. இரண்டு ஹெட் கான்ஸ்டெபில்கள், இன்ஸ்பெக்ட்டரொருவர், இரண்டு சப் இன்ஸ்பெக்டர்கள் இவர்கள் முன்னிலையில் சோதனையாரம்பிக்கப்பட்டது. சோதனைக்குப்பின் போலீஸ் சூப்பரின்டெண்டும், அடிஷனல் சூப்பரிண்டெண்டும் சுமார் $1\frac{1}{2}$-மணிக்கு வந்து சேர்ந்தனர். அவர்களுக்கு நடந்த சங்கதிகளைத்தெரிவித்து, பிடிப்பட்ட வஸ்துக்களும் காட்டபட்டன. $1\frac{1}{2}$-மணிக்குப்பின் அடிஷனல் மாஜிஸ்ட்ரேட் அங்குவந்தனர். நனைந்த ஒரு கந்தலில் அகப்பட்ட ஓர் கடிதத்தில் 18-எதிரிகளின் பேர்கள் எழுதப்பட்டிருந்தது. இந்த 18-எதிரிகளும் கொள்ளைக்கூட்டத்தில் சம்பந்தப்பட்டவர்களாகச் சொல்லப்படுகின்றது. அந்த 18-பேர்களில் 8-பேர்கள் எதிரிகளுக்குப்பொறுந்துகின்றன. மறுநாட் காலை 6-மணிக்கு பிரதம ரிபோர்ட் அனுப்பப்பட்டது. சோதனையில் அக்கிரமங்கள் நடத்தப்பட்டனவென்றும், அந்த அக்கிரமங்களால் அகப்பட்ட சொத்துக்களைப் பற்றிய சாக்ஷியம் ஒற்றுமையில்லாததாகச் செய்யாவிட்டாலும் சாக்ஷியங் கொடுத்தவர்களின் நிதானத்தைக் குறைக்குமென்றும் வாதஞ் செய்யப்பட்டது. சோதனை செய்தவர்கள் தேஹ பரிசோதனை கொடுக்கவில்லையென்று ஸ்பஷ்டமாய்த் தெரியவருகிறது. போலீசாரின் பிரவேசம் அக்கிரமமா யிருந்தபோதிலும் இச் சந்தர்ப்பத்தில் கவனிக்க முக்கியமானதல்ல. சோதனைப்பற்றிய சாக்ஷியம் ஸ்பஷ்டமாயாவது திருப்திகரமாயாவது ஏற்படவில்லை. சோதனை விதிகள் அகப்பட்டச் சொத்துக்களின் ஐக்கியத்தைப்பற்றிக் கோர்ட்டாருக்குத் திருப்தி செய்ய ஏற்பட்டமையால், அடிஷனல் மாஜிஸ்ட்ரேட் குடிசை இடமிருந்து, சோதனை ஜாப்தாவில் எழுதப்பட்டதைப் பார்த்துக்கொண்டு, ஜாப்தாவில் கையெழுத்திட்டபடியால் சோதனை விதிகள் சரிவர அனுஷ்டிக்கப்படவில்லை யென்று சொல்லப்படுகிறது. சோதனை ஜாப்தாவில் காணப்படும் திருத்தங்கள் அந்த தஸ்தாவேஜு போலீஸார் ஸ்வாதீனத்திலிருந்ததாக ஸ்பஷ்டமாய் ஏற்படவில்லை; ஆனால் மொத்தத்தில் அவைகள் முக்கியமானவைகளல்ல. இச்சம்பந்தமான சாக்ஷியத்தைப் பரிசோதித்ததில் மோசடியாய் வஸ்துக்கள் அக்குடிசைக்குள் சோதனைக்குமுந்தி வாதித்தபடிக்குப் போலீஸாரால் மறைத்து வைக்கப்பட்டதாக எண்ண விடமேயில்லை. தாக்கூர்தாஸ்பால், ஆதித்ய சான்தத்தா என்னும் இரண்டு எதிரிகளையும் விடுதலை செய்துவிட்டேன். மற்ற எதிரிகள் தங்கள்பேரில் குற்றம் செய்ததாக ஏற்படும் பலமான ருஜுவுக்குத் தாங்கள் அகஸ்மாத்தாயும், நிரபராதிகளாகவும் குடிசையிட மிருந்ததற்குச்சரியான முகாந்திரம் காட்டாததினால் அவர்களுடைய அப்பீலைத்தள்ளுபடி செய்து கீழ் கோர்ட் தண்டனைகள் காயப்படுத்தப்பட்டன.

மற்றொரு ஜட்ஜீ, சோதனை காலத்தில் எதிரிகள் சோதனைசெய்த விடத்தில் வைக்கப்படாமல் போனது குற்ற விசாரணை சட்டத்தின் 103-வது பிரிவின் கருத்துக்கு

விரோதமான தாயிருந்தபோதிலும் பஞ்சாய த்தாருடைய மதிப்பையாலோசித்து அவர் கள் போலீஸாருக்கு உடன் பட்டிருந்ததாக நினைக்க விடமில்லை யென்று அபிப்பிராயப் பட்டார்.

OUDH CASES.

அயோத்தியா கேஸுகள்.

கிரிமினல் அப்ளிகேஷன் நெ. 37 of 1914.

1914ளு ஏப்ரல்மீ 14வ.

(பக்கம் 273).

ஜட்ஜ் :—கன்ஹயாலால்.

அலாவுதீன்கான் .... எதிரி.

v.

இந்தியச் சக்கிரவர்த்தி .... பிரியாதி.

லாபாயிண்ட் :—பிரியாதிதின் குணகுணங் களைப்பற்றி நியாய பரிசோதனை செய்யப்படா மல் எதிரியை விடுதலை செய்வது. அதே குற் றத்திற்கு இரண்டாவது பிரியாதின் பேரில் விசாரணை.

வியாஜ்ஜியச் சுருக்கம்:—பிரியாதியின் குண குணங்களை நியாய பரிசோதனை செய்யாமல் ஒரு மாஜிஸ்ட்ரேட் எதிரியை விடுதலை செய் தால், அதே குற்றத்திற்கு இரண்டாவது பிரி யாதின் பேரில் விசாரணை செய்ய அவர் தக்க வர்.

விவரம் :—லைசன்ஸ் இல்லாமல் அபினி சம் பந்தமான சரஸ் என்னும் பதார்த்தத்தை விற் பனை செய்ததற்குச் சிட்சிக்கப்பட்டான்.

எதிரி போலீஸ் ஸப் இன்ஸ்பெக்ட்டரால் பிடிக்கப்பட்டு விசாரணைக்கு அனுப்பப்பட் டான். ஒரு எக்ஸைஸ் ஆபீசரின் ரிபோர்ட் அல்லது பிரியாதன்னியில் குற்றத்தை விசாரி க்க இடமில்லை யென்று மாஜிஸ்ட்ரேட் அபிப் பிராயப்பட்டு எதிரியைக் காவலிலிருந்து விடு தலை செய்துவிட்டார். எதிரியைப் பிடித்த ஸப் இன்ஸ்பெக்ட்டருக்கு எக்ஸைஸ் ஆபீசர் அதிகாரம் உண்டென்பதாகப் பின்பு மாஜிஸ் ட்ரேட்டுக்குத் தெரியவந்தது. இதைக்கொ ண்டு மாஜிஸ்ட்ரேட் தானே விசாரணைக்கு ஆரம்பித்து எதிரியை ஆஜராகும்படி சம்மன் அனுப்பினர். வாதிதரப்பில் ஏற்பட்ட சாக்ஷி யத்தை மாஜிஸ்ட்ரேட் அங்கீகரித்து எதிரிக்கு 50 ரூபாய் அபராதம், அபராதத்தைக் கட்டா விட்டால் 6-மாதங் வெறுங் காவல் தண்டனை விதித்தார். மாஜிஸ்ட்ரேட் தான் முதலில் செய்த எதிரியின் விடுதலை யுத்திரவைக்கெடு க்க அவருக்கு அதிகாரமில்லை என்பதாகவும், எக்ஸைஸ் சட்டத்தின் 70-வது பிரிவின்படி போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் எக்ஸைஸ் உத்தி யோகஸ்தராகாரென்றும் ரிவிஷனில் வாதிக் கப்பட்டது.

தீர்ப்பு.

எக்ஸைஸ் சட்டத்தின் 10-வதுபிரிவு,2-வது உட்பிரிவின்படி பிரதேச ராஜாங்கத்தார் சட் டத்தின் 50-வது பிரிவில் செப்பியிருக்கும் அதிகாரங்களை எல்லா போலீஸ் உத்தியோகஸ் தரும் கொடுக்கப் பெற்றனர். அவ்வதிகாரங் களை எக்ஸைஸ் சட்டத்தின்படிக்கான எக்குற் றத்திற்கும் குற்றவாளியைப் பிடித்துச் சோத னைசெய்து போலீஸ் உத்தியோகஸ்தர்களுக் குக் கட்டளையிடுகின்றன ; ஆகையால் சட்டத் தின் 3-வது பிரிவு, B-உட்பிரிவின் அர்த்தப்படி சப் இன்ஸ்பெக்டர் எக்ஸைஸ் ஆபீசராகிறூர். குற்றவிசாரணை சட்டத்தின் 62-வது பிரிவின் படி போலீஸ் உத்தியோகஸ்தரால் பிடிக்கப் பட்ட ஒருவன், ஒரு மாஜிஸ்ட்ரேட்டின் பிரத் த்தியேக உத்திரவினல் விடுதலை செய்யப்பட லாம். சாக்ஷிகளை விசாரித்து எதிரியின் பேரில் செய்த பிரியாது காரணமில்லாததென்று ஏற் பட்ட பிறகு எதிரியை விடுதலை செய்யுஞ் சந் தர்ப்பங்களுக்குக் குற்றவிசாரணை சட்டத்தின் 253-வது பிரிவு அன்வயிக்கும். பிரியாதை

தள்ளுபடி செய்தல், 249-வது பிரிவின்படி விசாரணையை நிறுத்துதல், எதிரியை விடுதலை செய்தல், குற்றப் பத்திரிகையின் பேரில் 273-வது பிரிவின்படி நமோது செய்தல் இவைகள், புனர் விசாரணைக்கு இடமில்லாமல் விடுதலை செய்ததாக எண்ண இடங்கொடுக்காதென்று 403-வது பிரிவின் விவரணத்தால் விளங்குகின்றது. I. L. R 29 Cal. 726-வது பக்கத்தில் காணுந்தீர்மானத்தினால் ஒருவாரண்ட் கேஸில் எதிரியை விடுதலை செய்த பிறகு, தான் செய்த விடுதலையை ரத்துசெய்து மறுபடி விசாரிக்க குற்ற விசாரணை சட்டத்தின் 437-வது பிரிவுபடிக்கான உத்திரவு அன்னியில் தானே அதே குற்றத்திற்கு விசாரணை தொடங்கவும் எதிரிக்கு ஆஜராகும்படி கட்டளையனுப்பவும், அதிகாரத்தை வகித்திருப்பதாகத் தெரியவருகிறது. I. L R. 29 Madras 126-வது பக்கத்தில் காணப்படும் தீர்மானத்தினாலும் 203-வது பிரிவிபடிக்குப் பிராதை தள்ளுபடிசெய்வதுமறுபடி செய்யும்விசாரணையைத்தடுக்காதென்று ஏற்படுகிறது. I.L.R.36 Allahabad 53-வது பக்கத்தில் காணப்படும் தீர்மானத்தில் ஒரு பிரத்தியேக குற்றத்திற்கு விசாரித்து எதிரியை விடுதலை செய்த மாஜிஸ்ட்ரேட் இரண்டாவது பிரியாதைக்கொண்டு அதே குற்றத்தை மறுபடி விசாரணை செய்ய அவருக்கு அதிகாரம் உண்டென்று கண்டிருக்கிறது. நியாய விசாரணையை ஒரு மாஜிஸ்ட்ரேட் செய்யாதவரையில் 366, 369-வது பிரிவுகளின்படி தீர்மானம் ஏற்படாததினால் மாஜிஸ்ட்ரேட் புனர்விசாரணை செய்ய அதிகாரம் பெற்றிருக்கிறார். ரிவிஷன் மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

1914-வது வருஷத்திய கிரிமினல் அப்பீல் நெம்பர்கள் 109, 112. பக்கம் 276.

1914-ஞ ஏப்ரல்மீ 28உ.

ஜட்ஜ் :—கன்ஹாயாலால்.

அப்பாஸ் குவாலிகான்—குற்றவாளி.

v.

இந்தியச் சக்கிரவர்த்தி—பிரியாதி.

லாபாயின்ட்:—ஒரே சந்தர்ப்பத்தில் செய்யப்பட்ட அநேக குற்றங்களை இன்னதென்று நிச்சியிக்கும் பத்ததி ஒரே விவகாரத்தில் சம்பந்தப்பட்டிருக்கும் பல குற்றங்கள், அவ்வவை உத்தேசங்களைக் கொண்டும், காரணகாரிய சம்பந்தத்தைக் கொண்டும், பிரதான அப்பிரதான நீதியைக்கொண்டும், தொடர்ச்சியாய் நடத்தப்பட்டதாக நிர்ணயிக்க வேண்டும் இப்படி நிர்ணயிப்பதில் அச்செய்கைகளை நடத்தின பிரத்தியேக நபர்களைப்பற்றி கவனிப்பது உசிதமல்ல.

வியாஜ்ஜிபச் சுருக்கம்:—ஆமது ஹுஸேன் என்பவன் லக்னௌமுனிசிபல் ஆபீசில் அம்மைகுத்தும் குமஸ்தா. அவன், 1904 வருஷத்துக்குச் சம்பந்தமான சவுக்கிதாரரிடமிருக்கும் ஜனன மரண கணக்கில் ஓர் பதிவையும் வசீக்கா ஆபீசர் முன்பாக விசாரணையிலிருக்கும் தாவாவை ஆதரிக்கும் பொருட்டு மேற்சொல்லிய ரிஜிஸ்டரின் பதிவுக்கு நகலாகத் தயாரித்து தஸ்தா வேஜையும், சிருஷ்டனை செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டான் அப்பாஸ்குலிகான் என்பவன், மேற்சொல்லிய தஸ்தாவேஜின் சிருஷ்டனையின் உடந்தைக்கும் அந்தச் சிருஷ்டனை தஸ்தாவேஜை சிருஷ்டனையாகத் தெரிந்திருந்தும் யதார்த்தமானதென்று உபயோகித்ததற்கும் குற்றஞ் சாட்டப்பட்டான் இரண்டு எதிரிகளையும் 3-வருஷம் கடுங்காவலுக்கு செஷன்ஸ் ஜட்ஜ் சிட்சித்தார்.

"Chandra Raka"

A very interesting Tamil Novel

BY

Mr. S. M. Appasawmi Naidu

சந்திர ரேகா

(அற்புதமான தமிழ் நாவல்.)

நீதிநூலுக்கு நூலாகவும் இன்பமான கதைக்குக்

கதையாகவுமிருக்கும்படியாக

ம-ா-ா-ஸ்ரீ எஸ். எம். அப்பாசாமி நாயுடு

அவர்களால் இயற்றப்பட்டது.

வாசிக்க வாசிக்க இன்பமாயிருக்கும்.

கம்பராமாயணம், கைவல்லியம், திருக்குறள், பாரதம், பாகவதம், பவத்கீதை முதலியவைகளிலிருந்து மேற்கோள்கள் எடுத்துக கூறப்பட்டிருக்கின்றன.

தும்ப மலர்போல வெளுப்பான கடுதாசியில் முத்துப்போன்ற எழுத்துகளால் அச்சிடப்பட்டு நேர்த்தியாகப் பயிண்டு செய்யப்பட்டிருக்கிறது.

விலை—தபால் சார்ஜ் உள்பட ரூ 1

மானேஜர்,

இந்தியன் லா ஜர்னல் ஆபீஸ்,

117, அரமனைக்காரத் தெருவு, சென்னை.

ஸ்ரீ

பெரியாழ்வார் அருளிச்செய்த

திருப்பல்லாண்டும் பெரியாழ்வார் திருமொழியும்

இவை வைத்த மாநிதி—முடும்பை

கோபாலகிருஷ்ணமாச்சாரியார் அவர்களால்

உரையுடன் இயற்றப்பட்டது.

இதனுள் அடங்கியவை.

1. பெரியாழ்வார் சரித்திரம்
2. திருப்பல்லாண்டு (உரையுடன்)
3. பெரியாழ்வார் திருமொழி (உரையுடன்)
4. செய்யுள் முதற்குறிப்பு அகராதி

குறிப்பு:—இதில் அவசியமான பதப்பிரயோஜனங்களையும் இன்றியமையாத இலக்கணக் குறிப்புகளையும், புராணக்கதைகளையும் எடுத்துக்காட்டி, பதப்பொருள், கருத்து, விசேஷார்த்தம், சொற்சுவை, பொருட்சுவை, யாப்பிலக்கணம், அணியிலக்கணம், ஐதிஹ்யம் அங்கங்கே விளக்கியிருத்தலோடு ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயங்களையும் விவரிக்கப்பட்டிருக்கிறது. பூர்வாசார்யர்களின் வியாக்கியான வாக்கியங்களும் உரிய இடங்களில் எடுத்தாளப்பட்டுள்ளன. அத்தியாபகற்கு மிகவும் அனுகூலமாகயிருக்கும். இதன் விலை ரூ. 1 4 0.

தபால் கூலி பிரத்தியேகம்.

மானேஜர், "இந்தியன் லா ஜர்னல் ஆபீஸ்,"

117, அரமனைக்காரத் தெருவு, சென்னை.